செய்தி வெளியீடு எண்:796 நாள்:27.09.2021

**செய்தி வெளியீடு**

**காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 14வது கூட்டம் புதுடெல்லியில் இன்று நடைபெற்றது**

**மேகதாது பிரச்சினை குறித்து விவாதிக்க தமிழ்நாடு உட்பட மூன்று மாநிலங்கள் கடும் எதிர்ப்பு**

**தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிலுவை தண்ணீரை உடனடியாக வழங்க கர்நாடகா மாநிலத்திற்கு ஆணையம் உத்தரவு**

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 14வது கூட்டம் இன்று (27.09.2021) புது டெல்லியில் ஆணைய அலுவலகத்தின் கூட்ட அரங்கில் ஆணையத்தின் தலைவர் திரு. எஸ். கே. ஹல்தர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். சந்தீப் சக்சேனா. இ.ஆ.ப., காவிரி தொழிலநுட்பக் குழுத் தலைவர் ஆர். சுப்ரமணியன், ஜல் சக்தி துறை இணை ஆணையர் திரு. டி. ஷர்மா, கேரளா மாநில நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. டி.கே. ஜோஸ். இ.ஆ.ப., கர்நாடக மாநில காவிரி நீர் வாரிய நெகமாவின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கே. ஜெயப்ரகாஷ், பாண்டிச்சேரி மாநில ஆணையாளர் மற்றும் செயலாளர் திரு. எ. விக்ராந்த் ராஜா. இ.ஆ.ப., தமிழ்நாடு காவிரி தொழில்நுட்பக் குழு உறுப்பினர் திரு. பட்டாபிராமன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தமிழகத்திற்கு உச்ச நீதி மன்றம் வழங்கிய உத்தரவின்படி கர்நாடகா நீர்ப்பங்கீட்டை முறையாக தமிழகத்திற்குக் கொடுக்கவில்லை. இம்மாதம் செப்டம்பர் 26 வரை 119.5 டி.எம்.சி. நீரை கர்நாடகா வழங்குவதற்குப் பதிலாக 85.8 டி.எம்.சி. நீரை மட்டுமே வழங்கியுள்ளது. காவிரி டெல்டா பகுதியில் பயிர் சாகுபடி பாதிக்காமல் இருக்க நிலுவையில் உள்ள நீரை கர்நாடகா உடனடியாக வழங்கிட வேண்டும் என தமிழ்நாடு சார்பில் வலியுறுத்தப்பட்டது. இதுகுறித்து கடந்த முறை தண்ணீர் திறந்து விட ஆணையம் உத்தரவிட்டும் கர்நாடகா அரசு முழுமையாக செயல்படுத்தவில்லை. ஆகவே, நிலுவையிலுள்ள தண்ணீரையும், வரும் அக்டோபர் மாதத்திற்கான தண்ணீரையும் உடனடியாக காவிரியில் திறந்துவிட கர்நாடகாவிற்கு உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதையொட்டி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி வழங்கிட வேண்டும் என ஆணையம் உத்தரவிட்டது. மேலும் இது குறித்து அடுத்த மாதம் அக்டோபர் 7ஆம் தேதி நடைபெறும் 15வது கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

காவேரி குண்டாறு இணைப்புத்திட்டம், மேகதாது அணை விரிவான திட்ட அறிக்கை ஆகியவை குறித்து விவாதிக்க நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பொருள் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதால் இக்கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என தமிழ்நாடு, சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஆகவே இப்பொருள் குறித்து விவாதம் தவிர்க்கப்பட்டது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் அவர்கள் "நான்கு மாநிலங்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இக்கூட்டத்தில் பேசப்பட்டது. மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரி மூன்று மாநிலங்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் அப்பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. நான்கு மாநிலங்களும் ஒத்துழைத்தால் மட்டுமே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க முடியும். தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய நிலுவைத் தண்ணீரை உடனடியாக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. இது குறித்து அடுத்த மாதம் 7ஆம் தேதி நடைபெறும் 15வது கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்" இவ்வாறு தெரிவித்தார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9